| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **317/2012** |
| **DATE** | : | **26.02.2026** |
| **பெயர்** | : | **காமாட்சி** |
| **கணவர் பெயர்** | : | **நாகராஜ்** |

**<u>வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

11. பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் பட்டா எண் 122 என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா இணைக்கப்படவில்லை என்றால் (சாட்சியிடம் ஆவணம் காண்பிக்கப்பட்டது) பட்டா பி.வா.சா.ஆ.4 ல் இல்லை ஆனால் நாங்கள் பட்டாவை தனியாக தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது போல் பட்டா எண் 122, எனக்கு விற்றவர்களின் பட்டா தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் பட்டா எண் 122 என்று பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சாட்சி எந்த பதிலும் அளிக்கவில்லை.

12. எனது பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 5ல் வாதிகள் சொல்வது போல பட்டா எண் 1, 15 கிடையாது என்று எதன் அடிப்படையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளோம் என்றால் ஆவணங்களை பார்த்ததின் அடிப்படையில் சொல்கிறேன், 1901 பத்திரத்தையும், பட்டா, சிட்டா, அடங்கல்களை பார்த்தும் மேற்படி விவரத்தை சொல்கிறேன். வருவாய் துறையில் அந்த ஆவணங்களை பார்த்தோம். நான் சொல்வது போல ஆவணங்களை பார்த்தற்கான அத்தாட்சி எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

13. வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்துள்ளேன். நான் சொத்து வாங்கிய உடனேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. –2 அ பதிவேட்டில் எனக்கு விற்ற முத்தம்மாளின் பெயர் வருகிறதா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். எனது சொத்திற்கு மின் இணைப்பு வாங்கியுள்ளேனா என்றால் இல்லை.

14. பி.வா.சா.ஆ– 18 நாங்கள் வாங்கிய தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான பதிலில் 93/2b மற்றும் 93/2dல் மிண் இணைப்பு உள்ளதா என்ற கேள்விக்கு குருநாதர் முதலியார் பெயரில் மின் இணைப்பு உள்ளதாக பதில் வந்துள்ளது என்றால் அது வேறு

வீட்டிற்கான மின் இணைப்பு. நான் சொல்வது போல் எந்த விவரமும் மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனது ஆவணத்திலேயே நான் சொல்வது போல் எந்த விவரமும் கிடையாது நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

15. குருநாதர் முதலியாரின் மகன் தான் வழக்கின் வாதி அருள். தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதை தெரிந்தே நான் கிரையம் வாங்கினேன், நான் இதே மாதிரி செயல்களில் ஈடுபடுவது தான் வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு முன்புள்ள முதல் சொந்தக்காரர்கள் சிவகொழுந்து செட்டியார் பெயரில் தான் பட்டா பாஸ்புக் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் சுவாதினத்தில் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது, நான் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்பு வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

FANNY RAJAN Digitally signed by FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram